விளையாட்டு, கலைப் போட்டிகளில் பின்லே பள்ளி சிறப்பிடம்

மாவட்ட நீச்சல் போட்டியில் வெற்றி பெற்று தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கம் பெற்ற மாணவர் எஸ். சஞ்சயை பாராட்டும் பள்ளி நிர்வாகத்தினர்.

மன்னார்குடி, ஆக. 19: மன்னார்குடி பின்லே மேல்நிலைப் பள்ளி மாணவர்கள் மாவட்ட, குறுவட்ட அளவிலான விளையாட்டு போட்டிகள் மற்றும் சுதந்திர தின விழா கலைப் போட்டியில் சிறப்பிடம் பெற்றுள்ளனர்.

மன்னார்குடியில் ஆக. 3-ஆம் தேதி நடைபெற்ற குறுவட்ட அளவிலான பள்ளிகளுக்கிடையேயான விளையாட்டுப் போட்டியில் 14 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான கூடைப்பந்து இறுதிப் போட்டியில் மன்னார்குடி தேசிய மேல்நிலைப் பள்ளி அணியை 60-24 என்ற அடிப்படையில் பின்லே மேல்நிலைப்பள்ளி அணியினர் வீழ்த்தி சிறப்பிடம் பெற்றதுடன் மாவட்ட அளவிலான போட்டிக்கு தேர்வு செய்யப்பட்டனர். திருவாரூரில் ஆக. 14-ஆம் தேதி நடைபெற்ற பள்ளிகளுக்கு இடையே மாவட்ட அளவிலான நீச்சல் போட்டியில், இப்பள்ளி பிளஸ் 1 மாணவர் எஸ். சஞ்சய் 400 மீட்டர் பிரிஸ்டைல் பிரிவில் தங்கப் பதக்கமும், 50 மீட்டர் பிரி ஸ்டைல் பிரிவில் வெள்ளிப் பதக்கமும் பெற்றதுடன். மாநில அளவிலான போட்டிக்கு தேர்வு செய்யப்பட்டுள்ளார்.

சுதந்திர தினத்தையொட்டி , திருவாரூரில் பள்ளி, கல்லூரி மாணவ, மாணவிகள் பங்கேற்ற கலைநிகழ்ச்சியில், இப்பள்ளியைச் சேர்ந்த 130 மாணவர்கள் மற்றும் என்சிசி மாணவர்கள் கலந்துகொண்டு சுதந்திரப் போராட்டத் தலைவர்கள் 11 பேரின் வாழ்க்கை வரலாறு மற்றும் தேசப் பற்றை வெளிப்படுத்தும் கலைநிகழ்ச்சிகள் மற்றும் என்சிசி மாணவர்களின் வாகா எல்லை அணிவகுப்பு ஆகியவற்றை செய்துகாட்டி மாவட்ட அளவில் இரண்டிடம் பெற்று அதற்கான பரிசு கோப்பையை மாவட்ட ஆட்சியர் வ. மோனச்சந்திரனிடம் பெற்றனர்.

சிறப்பிடம் பெற்ற மாணவர்களை, பள்ளி தாளாளர் எஸ்.எஸ். ஸ்டாலின், தலைமை ஆசிரியர் டி. ஆபிரகாம் ஜட்சன், ஆசிரியர்கள் பாராட்டினர்.

உதவிப்பொருள்கள் வழங்கல்...

திருவாரூர் மேட்டுப்பாளையம் பகுதியில் அண்மையில் ஏற்பட்ட தீ விபத்தில் பாதிக்கப்பட்ட 7 குடும்பத்தினருக்கு ரூ. 50,000 மதிப்பில் உதவிப்பொருள்களை செவ்வாய்க்கிழமை வழங்கிய இன்னர்வீல் சங்கத் தலைவர் ஸ்வர்ணலதா சௌந்தர்ராஜன். உடன், முன்னாள் தலைவர்கள் பவானி பாண்டியன், சாந்தி வடிவேல், சிவசங்கரி அகிலன், சங்க உறுப்பினர்கள் ஷர்மி விஜய் ஆனந்த், சுகந்தி சரவணன் உள்ளிட்டோர்.

ஆற்றில் தடுப்பணையை சீரமைக்கக் கோரி விவசாயிகள் ஆர்ப்பாட்டம்

மன்னார்குடி, ஆக. 19: மன்னார்குடி அருகே ஆற்றில் சேதமடைந்துள்ள தடுப்பணையை சீரமைக்கக் கோரி விவசாயிகள் ஆற்றில் இறங்கி புதன்கிழமை போராட்டம் நடத்தினர்.

திருக்களார் பகுதியில் 1500-க்கும் மேற்பட்ட ஏக்கர் பரப்பில் குறுவை, சம்பா, தாளடி நெல் பயிர்களும், கோடையில் எள்ளு, உளுந்து போன்ற தானிய பயிர்களும் ஆண்டுதோறும் சாகுபடி செய்து வருகிறார்கள்.

மேட்டூர் அணையிலிருந்து திறந்துவிடப்படும் தண்ணீரை பயன்படுத்தி பொண்ணுகொண்டான் ஆற்றில் இருந்து பாசன வாய்க்கால் மூலம் சாகுபடி நடைபெறுகிறது. திருக்களர் -அழகிரிகோட்டகம் சாலை இடையில் பொண்ணுகொண்டான் ஆற்றில் தடுப்பணை அமைத்து தண்ணீரை தேக்கி திருக்களார் பகுதியில் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது.

திருக்களாரில் பொண்ணு கொண்டான் ஆற்றில் சேதமடைந்துள்ள தடுப்பணையை சீரமைக்கக் கோரி ஆர்ப்பாட்டம் நடத்திய விவசாயிகள்.

இந்த தடுப்பணை கட்டப்பட்டு 50 ஆண்டுகள் கடந்துவிட்ட நிலையில், சரியாக பராமரிக்கப்படாததால் தற்போது அணை முற்றிலும் சேதமடைந்துள்ளது.

இதனால், தண்ணீரை தேக்கி சாகுபடி நிலத்திற்கு கொண்டு போக முடியாததால் குறுவை, சம்பா சாகுபடி செய்ய முடியாமல் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தடுப்பணையை சீரமைக்க மாவட்ட நிர்வாகம், பொதுப் பணித்துறை, மக்கள் பிரதிநிதி ஆகியோரிடம் கோரிக்கை மனு கொடுத்தும், நேரடியாக சந்தித்து விவரம் தெரிவித்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்நிலையில், பாசனதாரர் சங்கத் தலைவர் பாரிஜாதம், உழவர் நலக்குழு கூட்டமைப்பு தலைவர் சந்திரபோஸ், இயற்கை வேளாண்மை சங்கத் தலைவர் சேகர்ஆகியோர் தலைமையில் விவசாயிகள் பொண்ணுகொண்டன் ஆற்றில் இறங்கி சேதமடைந்துள்ள தடுப்பணையை சீரமைக்க கோரி கோஷங்கள் எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ஒரு மாத காலத்திற்குள் தடுப்பணையை சீரமைக்க வேண்டும். இப் பிரச்னையில் அரசுத் துறையினர் மெத்தனப் போக்குடன நடந்துகொண்டால் அனைத்து விவசாயிகளையும் ஒன்றிணைத்து தொடர் போராட்டம் நடத்தப்படும் என விவசாயிகள் தெரிவித்தனர்.

திருவாரூரில் நாளை முழு தேங்காய் ஏலம்

திருவாரூர், ஆக. 19: திருவாரூரில் வெள்ளிக்கிழமை (ஆக.21) முழு தேங்காய் ஏலம் நடைபெற உள்ளது என கூட்டுறவு விற்பனை இணைய இணைப் பதிவாளர் ஜெ. ஆனந்தி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு: திருவாரூர் பழைய பேருந்து நிலையம் எதிரில் உள்ள தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையத்தின் தலைமை அலுவலக வளாகத்தில் முழு தேங்காய் ஏலம் வெள்ளிக்கிழமை நடைபெற உள்ளது. இதில் தென்னை விவசாயிகள் பங்கேற்று பயனடையலாம். ஆக.7-ஆம் தேதி நடைபெற்ற ஏலத்தில் 40-க்கும் மேற்பட்ட தென்னை விவசாயிகள் 26.020 மெட்ரிக் டன் தேங்காயுடன் (மட்டை உரித்தது) பங்கேற்று பயனடைந்தனர். அதிகபட்சமாக கிலோவுக்கு ரூ. 55, குறைந்தபட்சம் ரூ. 51 என்ற அளவில் ஏலம் விடப்பட்டு 5 வியாபாரிகள் பங்கேற்று ஏலம்எடுத்தனர் என தெரிவித்துள்ளார்.

அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்க வட்ட பேரவை கூட்டம்

நீடாமங்கலம், ஆக.19: தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை ஓய்வூதியர் சங்க வட்டப்பேரவை கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது.

வட்டத்தலைவர் கோ.அம்பிகாபதி தலைமை வகித்தார். மாவட்ட துணைத்தலைவர் ஆ. பெத்தபெருமாள், வட்ட துணைத் தலைவர் அழகர், வட்ட செயலாளர் வி. ராமகிருஷ்ணன் முன்னிலை வகித்தனர்.

மாவட்ட தலைவர் பி. சண்முகம் தொடக்கவுரையாற்றினார். சங்க நிர்வாகிகள் கே. முனியாண்டி, வி. கல்யாணசுந்தரம், சண்முகம், ஏ. குருநாதன், எஸ்.கிருஷ்ணசாமி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

அரசு ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் எஸ். செங்குட்டுவன் நிறைவுரையாற்றினார். மாவட்ட இணைச்செயலாளர் எம். செல்லதுரை வரவேற்றார். சங்க நிர்வாகி எம். தம்புசாமி நன்றி கூறினார்.

ஓடம்போக்கியாற்றில் தேங்கிய குப்பைகளை அகற்றக் கோரிக்கை

திருவாரூர், ஆக. 19: திருவாரூர் ஓடம்போக்கியாற்றின் தடுப்பணை மீது குப்பைகள் கொட்டுவதை தடுக்க வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கொரடாச்சேரி அருகே எண்கண் பகுதியில் இந்த ஓடம்போக்கி ஆறு, காவிரியின் கிளை ஆற்றிலிருந்து பிரிந்து வருகிறது. திருவாரூர் நகரப் பகுதி வழியாக வந்து வெட்டாற்றில் கலக்கிறது. திருவாரூர் பகுதியில் விளைநிலங்களுக்கு பாசன ஆறாக பயனளிக்கிறது. எண்கண் பகுதியில் தனது பயணத்தை தொடங்கினாலும், திருவாரூர் நகரப் பகுதிக்கு வரும்போது, ஆக்கிரமிப்புகள் காரணமாக அகலம் குறுகி, வாய்க்கால் போல மெல்ல சுறுங்கி வருகிறது ஓடம்போக்கி ஆறு. தவிர ஆற்றின் கரையையொட்டி அதிக வணிக நிறுவனங்கள் இருப்பதால் ஏராளமான குப்பைகளும், கழிவுகளில் இந்த வணிக நிறுவனங்களால் ஆற்றில் கொட்டப்படுகின்றன.

இதனால், ஓடம்போக்கி ஆறு, தண்ணீர் பாயாத காலங்களில் கழிவுநீர் செல்லும் கால்வாயாக மாறி வருகிறது. திருவாரூர் கடைவீதியிலிருந்து நேதாஜி சாலைக்கு செல்லும் பகுதியில் உள்ள பாலம் அருகே ஓடம்போக்கி ஆற்றில் தடுப்பணை உள்ளது. வணிக நிறுவனங்கள் ஆற்றில் கொட்டும் கழிவுகள் அனைத்து இந்த தடுப்பணை மீது தேங்கி, அவ்வழியாகச் செல்வோருக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்துகின்றன. சுற்றுப்புறத் தூய்மையின்மைக்கு வழிவகுப்பதுடன் துர்நாற்றத்தையும் ஏற்படுத்துகின்றன.



ஓடம்போக்கி ஆற்றின் தடுப்பணை மீது தேங்கிக் கிடக்கும் குப்பைகள்.

இதுகுறித்து இப்பகுதியைப் பயன்படுத்துவோர் தெரிவித்தது: ஓடம்போக்கியாற்றில் குப்பைகளும் கழிவுகளும் தேங்கிக் கிடக்கின்றன. ஆறு முழுவதும் வெங்காயத் தாமரைச் செடிகள் படர்ந்து காணப்படுகின்றன. தவிர, நகரப் பகுதியில் உள்ள தடுப்பணை மீது ஏராளமான குப்பைகள் கிடக்கின்றன. ஆற்றில் வீசப்படும் குப்பைகள், அப்படியே அணை மீது தேங்கி துர்நாற்றத்தை ஏற்படுத்துகின்றன.

அணைகள் மீது வீசப்படும் குப்பைகள் அகற்றுவது எளிதான காரியமல்ல. தூய்மைப் பணியாளர்கள், தினசரி ஆற்றுப் பாலத்திலிருந்து அணையின் மீது தாவி ஏறி எளிதில் இந்த குப்பைகளை அள்ள முடியாது. இனிமேல் ஆற்றில் தண்ணீர் வரும்போது, அணையை தூய்மைப் படுத்தும் பணிகள் நடைபெறும். அப்போது தான் குப்பைகள் அகற்ற முடியும். அதன்பிறகு மீண்டும் குப்பைகள் தேங்கும்.

தடுப்பணை மீது குப்பைகளை கொட்டும் வணிக நிறுவனங்களின் உரிமையாளர்கள், மக்களின் சிரமங்களை புரிந்து கொள்ள வேண்டும். இந்த வழியாகச் செல்லும் மக்கள் பெரும் பாதிப்பு அடைவர் என்பதை உணர வேண்டும். எனவே, ஆற்றில் குப்பைகள் கொட்டுவதை தடுக்க நடவடிக்கை எடுப்பதுடன், தடுப்பணை மீது குப்பைகள் தேங்காத வகையிலும், குப்பைகள் கொட்டாத வகையிலும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கின்றனர்.

UJJIVAN SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: மிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.
கிளை அலுவலகம்: கதவு எண்..74, வார்டு எண்.2, அன்னாகாமாட்சி டவர், ப்ளாக் 38, நெற்கு தெரு, நெற்கு சேதி, திருவாரூர், தமிழ்நாடு - 610001

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்புதடைமுறை விதிகள் 2002 விதி எண். 8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்க்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	கடன் நிலுவைத் தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை (EMD)
163976200000001 1.Mr.ரவிச்சந்திரன் 2.Mrs.S.கங்கா 3.Mr.ராம்கி	(i) 07.07.2021 05.07.2021 அன்றுள்ளபடி ரூ.5,47,479/- (ரூபாய் ஐந்து லட்சத்து நாற்பத்து ஏழாயிரத்து நானூற்று எழுபத்து ஒன்பது மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் 07.12.2022 & நேரடியான சுவாதீனம் 13.06.2026	18.08.2026 அன்றுள்ளபடி ரூ.9,57,110.57 (ரூபாய் ஒன்பது லட்சத்து ஐம்பத்து ஏழாயிரத்து நூற்றுபத்து மற்றும் பைசா ஐம்பத்து ஏழு மட்டும்)	ரூ.8,91,000/- ரூபாய் எட்டு லட்சத்து தொண்ணூற்று ஒன்றாயிரம் மட்டும்)	ரூ.89,100/- (ரூபாய் எண்பத்து ஒன்பதாயிரத்து நூறு மட்டும்)

சொத்து விவரம்: மயிலாடுதுறை பதிவு மாவட்டம், பேரளம் சார் பதிவு மாவட்டம் எல்லைக்குட்பட்ட R.S.எண்.34-2F மற்றும் புதிய R.S.எண்.196-9, மேற்கு தெரு, 3 கூத்தனூர் வருவாய் கிராமம், நன்னிலம் தாலுகா என்னும் முகவரியில் 2180 சதுர அடி நிலம், வீட்டுக்கட்டடம், அதனுடன் அனைத்து இதர அனுபந்த உரிமைகள் மற்றும் வேதுவுட் உரிமைகள், அதனுடன் இணைந்த துண்டுகளும் பகுதிகளும். எல்லைகள்: ரவிச்சந்திரன்-க்கு சொந்தமான சொத்துக்கு வடக்கு, ரோடுக்கு தெற்கு, குணசேகரன்-க்கு சொந்தமான நிலச்சொத்துக்கு மேற்கு, செல்வராஜ்-க்கு சொந்தமான நிலச்சொத்துக்கு கிழக்கு.

இ-ஏல தேதி மற்றும் நேரம் : 30.09.2026 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00 மணி வரை

விலைக்குறிப்பிடுகளை சமர்ப்பிக்க கடைசி தேதி: 29.09.2026 அன்றோ அதற்கு முன்னரோ காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

சொத்தினை பார்வையிடும் தேதி & நேரம் 28.09.2026 காலை 10.00 மணியிலிருந்து மாலை 5.00 மணி வரை

மேலும் விவரங்களுக்கு, தொடர்பு கொள்ள வேண்டிய வங்கியின் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி : Mr.ஞானவேல் - 98410 17131 / Mr.டிஜோ சாஜன் - 78451 92961

இ-ஏலமானது "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் விற்பனை செய்யப்படும்.
இ-ஏலமானது உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட இ-ஏல சேவை வழங்குனராான M/s.C1 India PVT LTD. மூலம் நடைபெறவுள்ளது. (தொடர்புக்கு Mr.பிரபாகரன் Mob.74182 81709) உத்தேச விலைக்குறிப்பிட்டாளர்கள் இணையதளத்தில் உள்ள சொத்துக்களின் விவரங்களுக்கு https://www.bankeauctions.com or https://www.ujjivansfb.in/e-auctions பார்வையிடலாம் மற்றும் விலைக்குறிப்பிட்டில் பங்கேற்பதற்காக அவர்கள் தங்கள் பெயரை https://www.bankeauctions.com-ல் பதிவு செய்து பயனாளர் ID மற்றும் கடவுச்சொல்லினை இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். விருப்பமுள்ள விலைக்குறிப்பிட்டாளர்கள் இ-ஏலத்தின் ஆன்லைன் பயிற்சிய சேவை வழங்குனரிடருந்து பெற்றுக் கொள்ளலாம். M/s. C1 India PVT LTD, Helpline Number's- 72919 18824, 25, 26 support email id:-support@bankeauctions.com, Auction portal - https://www.bankeauctions.com.
விற்பனை குறித்த விரிவான விதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கு, கடன் கொடுத்த வங்கியின் இணையதளத்தில் பார்க்கலாம்.
i.e., https://www.ujjivansfb.in/e-auctions / https://www.bankeauctions.com

தேதி: 20.08.2026 ஒப்பம்/- அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி, உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்

CHANGE OF NAME

I, RABIABDUL BASARIA D/o THAJUDEEN, (D.O.B: 27/09/1983), residing at No.50, Sar Ahamed Street, Nagapattinam - 611001, Nagapattinam District, Tamil Nadu, India, Shall hence forth be known as RABITHUL BASIRIYA.

RABIABDUL BASARIA
Nagapattinam, 17.08.2026

CHANGE OF NAME

I, Arounaguiry Covindarassou, son of Govindharaj, Date of Birth 09/07/1967 and residing at No.23, Pudhu Street, Thirumalairayan pattinam, T R Pattinam South, Karaikal 609606, U.T. of Pudu cherry, India shall henceforth be called and known as ARUNAGIRI G for all the purposes.

Arounaguiry Covindarassou
Karaikal, 19.08.2026

பொது அறிவிப்பு

எனது கட்சிக்காரர் சென்னை, ஆழந்தூர், சௌரி வீதி, கதவு எண்: 44/66 கொண்ட வீட்டில் வசிக்கும் திரு. சிவசாமி அவர்களின் குமாரர் திரு. கண்ணன் அவர்கள் அளித்த தகவலின் பேரில் நான் கொடுக்கும் பொது அறிவிப்பு என்னவென்றால், எனது கட்சிக்காரருக்கு சொந்தமான, எண்: 10 - வரிச்சிக்குடி வடக்கு கிராமத்தில், ரீ-சர்வே எண்: 119/5A, கதாஸ்தர் எண்: 1173/6pt, இரு கிரயப் பத்திரங்களின்படி மொத்த பரப்பளவு 04 ஆர் 28 சாந்தியார் அளவு கொண்ட புஞ்சையை, காரைக்கால் உதவிப்பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணம் எண்கள்: 576/1999 மற்றும் 577/1999 கொண்ட அசல் கிரயப் பத்திரங்களை, வில்லங்க சான்று எடுப்பதற்காக சென்றபோது தவறுதலாக எங்கோ எனது கட்சிக்காரர் தொலைத்துவிட்டார். மேற்படி சொத்தை எனது கட்சிக்காரர் உரிமை மாற்றம் செய்ய உள்ளார். இந்த பொது அறிவிப்பு கண்ட 07 நாட்களுக்குள் யாருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் தெரிவிக்கலாம். 07 நாட்கள் முடிந்த பிறகு தாக்கல் செய்துள்ள மேற்படி ஆவணம் பதிவு உறுதி செய்யப்படும் என்று இதன்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

A.V.J.SELVAMUTHU KUMARAN B.A., L.L.B.,
ADVOCATE - NOTARY PUBLIC, KARAIKAL

சிறுமிக்கு பாலியல் தொல்லை: தொழிலாளிக்கு 45 ஆண்டுகள் சிறை

திருவாரூர், ஆக.19: திருவாரூர் அருகே 11 வயது சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த கூலித் தொழிலாளிக்கு 45 ஆண்டுகள் சிறைத்தண்டனை விதித்து திருவாரூர் மகளிர் விரைவு நீதிமன்றம் புதன்கிழமை தீர்ப்பளித்தது.

திருவாரூர் மாவட்டம் கச்சேரி அருகே உள்ள கிராமத்தைச் சேர்ந்தவர் அன்பழகன் (49). விவசாயக் கூலித் தொழிலாளியான இவர், கடந்த 2021-இல் வீட்டின் அருகில் வசித்து வரும் 11 வயது சிறுமியை தோப்புக்கு அழைத்துச் சென்று பலமுறை பாலியல் ரீதியாக தொல்லை கொடுத்தாராம்.

இதில் பாதிக்கப்பட்ட சிறுமி சோர்வாக இருந்ததை பார்த்த பெற்றோர் சிறுமியிடம் விசாரித்தபோது சிறுமி தனக்கு நேர்ந்த பாலியல் தொல்லை குறித்து தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சிறுமியின் பெற்றோர் திருவாரூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் அளித்த புகாரின் பேரில் விசாரணை நடைபெற்று வந்தது. புதன்கிழமை நடைபெற்ற இறுதி விசாரணையில், குற்றம்சாட்டப்பட்ட அன்பழகனுக்கு 45 ஆண்டுகள் சிறைத் தண்டனையும் ரூ.5,000 அபராதம் விதித்து நீதிபதி சரத்ராஜ் தீர்ப்பு வழங்கினார்.

பாதிக்கப்பட்ட சிறுமிக்கு தமிழக அரசின் சார்பில் ரூ. 6 லட்சம் வழங்கவும் உத்தரவிட்டார் .இதில் ஏற்கெனவே வழங்கப்பட்ட ரூ. 1 லட்சத்தை கழித்துக்கொண்டு எஞ்சிய ரூ. 5 லட்சத்தை வழங்க உத்தரவிட்டார்.

முருகன் கோயிலில் விசாக நட்சத்திர வழிபாடு

நீடாமங்கலம், ஆக. 19: நீடாமங்கலம் கீழத்தெரு முருகன் கோயிலில் விசாக நட்சத்திரத்தை முன்னிட்டு சிறப்பு வழிபாடு புதன்கிழமை நடைபெற்றது.

இதையொட்டி, வள்ளி தெய்வானை சமேத சுப்ரமணியர் மற்றும் பரிவாரத் தெய்வங்களுக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது. நீடாமங்கலம் பகுதிகளில் உள்ள சிவன் கோயில்களில் வள்ளி, தெய்வானை சமேத சுப்பிரமணிய சுவாமிக்கு சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது.

இன்று விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருவாரூர், ஆக. 19: திருவாரூர் கோட்டத்துக்குள்பட்ட விவசாயிகளுக்கான குறைதீர் கூட்டம் வியாழக்கிழமை (ஆக.20) மாலை 4 மணியளவில் கோட்டாட்சியர் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இதில், திருவாரூர் கோட்டத்தில் உள்ள விவசாயிகள் பங்கேற்று குறைகளை தெரிவித்து பயன்பெறலாம் என கோட்டாட்சியர் சத்யா வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

பருத்தி குவிண்டால் ரூ. 9,129-க்கு விற்பனை

திருவாரூர், ஆக. 19: திருவாரூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் வாரம்தோறும் செவ்வாய்க்கிழமை தேசிய வேளாண் மின்னணு சந்தைத் திட்டத்தில் பருத்தி மறைமுக ஏலம் நடைபெற்று வருகிறது.

அந்தவகையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பருத்தி மறைமுக ஏலத்துக்கு 319 விவசாயிகள் 636 மெட்ரிக் டன் பருத்தியை கொண்டு வந்திருந்தனர். ஏலத்தில், பல்வேறு பகுதிகளைச் சேர்ந்த வணிகர்கள் பங்கேற்றனர். ஆன்லைன் முறையில் மறைமுக ஏலம் நடைபெற்றது.இதில்பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு அதிகபட்சம் ரூ.9,129 க்கும் குறைந்தபட்சம்ரூ.8,569க்கும் என சராசரியாக ரூ.8,931 க்கு விற்பனையானது.

இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, குத்தலாம் கிளை
50, மேட்டுதெரு, குத்தாலம்-609801. Email: iob0045@iob.bank.in, Mob: 8925950045

பெட்டகங்களை உடைத்துத் திறப்பது குறித்த பொது அறிவிப்பு

இந்த அறிவிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள நபர், இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் மேற்கண்ட கிளையில் பாதுகாப்புப் பெட்டக வசதியைப் பயன்படுத்திக் கொண்டுள்ளார் என்பதை சம்பந்தப்பட்ட நபருக்கும், பொதுமக்களுக்கும் இதன்மூலம் அறிவிக்கப்படுகிறது. சம்பந்தப்பட்ட கிளை, லாக்கர் வாடகைப் பாக்கியைச் செலுத்துமாறு கோரி, எங்கள் வங்கிப் பதிவேடுகளில் உள்ள முகவரிக்கு, லாக்கர் வாடகைதாரர்களுக்கு ஒப்புகை அட்டை (AD) உடன் கூடிய பதிவுத் தபால் மூலம் அறிவிப்புகள்/நினைவூட்டல் கடிதங்களை ஏற்கனவே அனுப்பியுள்ளது. இந்த குறிப்பிட்ட கடிதங்கள் *திருப்பி அனுப்பப்பட்டன / ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இந்த அறிவிப்புகள் அனுப்பப்பட்ட போதிலும், லாக்கர் வாடகைதாரர்கள் வங்கிக் கிளையைத் தொடர்பு கொள்ளவில்லை, மேலும் வங்கி கோரியபடி லாக்கர் வாடகைப் பாக்கியையும் செலுத்தவில்லை. கீழே குறிப்பிடப்பட்டுள்ள **லாக்கர் வாடகைதாரர்கள் / சட்டப்பூர்வ வாரிசுகள் இதை ஒரு திறப்பு அறிவிப்பாகக் கருதி, தேவையான ஆவணங்களுடன் சம்பந்தப்பட்ட கிளையைத் தொடர்பு கொண்டு, இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட நாளிலிருந்து 10 நாட்களுக்குள் லாக்கர் வாடகைப் பாக்கியைச் செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அவ்வாறு லாக்கர் வாடகைப் பாக்கியைச் செலுத்த தவறினால், வங்கி எவ்வித இதர அறிவிப்போ தகவலோ இன்றி, வாடகைக்கு எடுத்தவர்கள் அல்லது அவர்களின் சட்டப் பிரதிநிதிகள்/வாரிசுகளின் முழுப் பொறுப்பிலும் செலவிலும் லாக்கரை உடைத்துத் திறக்கும்.

வ. எண்.	லாக்கர் எண்.	லாக்கர் வாடகை நிலுவை & தாமதக் கட்டணங்கள்	** லாக்கர் வாடகைக்கு எடுப்பவரின் பெயர் & முகவரி
1	020002	ரூ.7600 /– + GST மற்றும் இதர கட்டணங்கள்	திரு. கருப்பையா R, 21031 கம்பர் காலனி, ராஜகோபாலபுரம், குத்தாலம் அஞ்சல்.
2	010051	ரூ.12,401 /– + GST மற்றும் இதர கட்டணங்கள்	திரு. ரவீந்திரன் S R, 1, மேலசெட்டித்தெரு, குத்தாலம்
3	020020	ரூ.20,500 /– + GST மற்றும் இதர கட்டணங்கள்	திருமதி. ஜெயா G & கோவிந்தராஜன் T, 2552, மேல செட்டித்தெரு, குத்தாலம்.

மேலும் விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்: கிளை மேலாளர், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, குத்தாலம் கிளை, தொலைபேசி எண்: 8925950045

இடம்:குத்தாலம், தேதி:19.08.2026 அங்கீகரிக்கப்பட்ட அலுவலர், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி.

* பொருந்தக்கூடியவற்றைச் சேர்த்துக் கொள்ளவும்.
** லாக்கர் வாடகைக்கு எடுத்தவர் / அவரது நிறைவேற்றுநர்(கள்) / நிர்வாகி(கள்) / சட்டப் பிரதிநிதி(கள்) (தனிநபர், தனி உரிமையாளர் நிறுவனம் / இந்து கூட்டுக் குடும்பம் என்றால்) மற்றும் நிறுவனங்கள் என்றால் வாரிசுகள் அல்லது கூட்டாண்மை நிறுவனம் என்றால் அத்தகைய நிறுவனப் பங்குதாரர்களின் பெயரைச் சேர்க்கவும்.

மன்னார்குடி கிளை, மதுரை மண்டலம் :
பாங்க் ஆப் இந்தியா Bank of India BOI
எண்.127, RGK அபார்ட்மெண்ட்ஸ், 1வது மேற்கு வீதி, மன்னார்குடி, திருவாரூர் - 614 001, போன் : 04367 250606
இமெயில் : MANNARGUDI.MADURAI@bankofindia.bank.in

சுவாதீன அறிவிப்பு

[விதி-8(1)ல் காண்க] (அசையாச் சொத்திற்காக)

2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்துக்களை பத்திரப்படுத்துதல், நிதிச் சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்க சட்ட ஷரத்துக்களின்படி பிரிவு 13(12)-ன் கீழ் விதி 3-ன் படி பேங்க் ஆப் இந்தியாவின், மன்னார்குடி கிளை, அங்கீகரிக்கப்பட்ட அலுவலரால் இவ்வங்கியிலிருந்து கடன்பெற்ற கடன்தாரர் : திருமதி.சுகன்யா முருகேசன், என்பவர் திருப்பிச் செலுத்த வேண்டிய கேட்பு ஓலையில் குறிப்பிடப்பட்டுள்ள தொகை, ரூ.8,20,608.84 (ரூபாய் எட்டு லட்சத்து இருபதாயிரத்து அறுநூற்று எட்டு மற்றும் பைசா எண்பத்து நான்கு மட்டும்) மற்றும் வட்டியுடன் சேர்த்து செலுத்த வேண்டிய தொகையை 21.05.2026 நாளிட்ட கேட்பு ஓலை பெற்றுக் கொண்ட தேதியிலிருந்து 60 நாட்களுக்குள் திரும்பச் செலுத்துமாறு பணிக்கப்பட்டது.

கடன்தாரர் மேற்கண்ட தொகையினை செலுத்தத் தவறியதால் மேற்கண்ட சட்ட விதிகளின் 13(4) மற்றும் விதி 8ன் கீழ் 18.08.2026ம் தேதி, கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை கீழே கையொப்பமிட்டவர் வங்கியின் சார்பாக சுவாதீனம் செய்து உள்ளார் என்பதை கடன்தாரர் மற்றும் பொது மக்களுக்கும் இதன் மூலம் அறிவ